**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT COURT,**

KRISHNAGIRI

**Session Case No.158 of 2022**

Prosecution witness LW5 (PW5) Chief

Solemnly affirmed sworn by **Tr.R.Mohan** Grade–I B.C., on date 14.08.2025 in accordance with provisions with the Act of 1873.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | திரு.பட்டாபி | Father Name | : | திரு.முனுசாமி |
| Village | : | | Taluk | : | |
| Calling | : | | Age | : | |

**Accused Present.**

**முதல் விசாரணை:**

நான் நொஞ்சிபட்டியில் வசிக்கிறேன் . திருப்பத்தூரில் பர்னிச்சர் கடையில் வேலை செய்கிறேன் . கேசவன் என் சொந்த சித்தப்பா . கேசவன் ஓலா கம்பெனில் வாட்ச் மேனாக இருந்து வந்தார் . 20.10.2021 தேதி சாயங்காலம் 7.00 மணியளவில் அன்புநிலா எனக்கு போன் செய்து தன்னுடைய அப்பா சூளக்கரை பஸ்டாப் அருகே இறந்துவிட்டதாக தகவல் சொன்னார். மேற்படி கேசவன் வேலைக்கு போவதற்காக சூளக்கரை பஸ்டாப்புக்கு மாலை 6.30 வந்தபோது மேட்டுதாங்கள் கிராமத்தை சேர்ந்த தம்பிதுரை (எ) அறிவு போதையில் வந்துபோய்க் கொண்டியிருந்தவர்களிடம் தகராறு செய்தவரை கேவசன் ஏன் என்று கேட்க அவரை அடித்து கீழே தள்ளி கையில் அணிந்திருந்த வளையத்தால் கேசவனின் வலது கண்ணின் மீது குத்தியும் , கீழே தள்ளி நெஞ்சின் மீது ஏறி அதே வளையத்தால் குத்தியும் காயம் ஏற்படுத்திவிட்டு அவர் போய்விட்டார் . இந்த தகவல் கேட்டு நான் போச்சம்பள்ளி அரசு மருத்துவமனை சென்று என் சித்தப்பா கேசவன்

உடலை பார்த்தேன். அதன்பிறகு அன்புநிலாவை அழைத்துக்கொண்டு போய் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டது , போலீசார் என்னை மறுநாள் விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

இந்த சம்பவத்தை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். அன்புநிலா எனக்கு போன் செய்து தன்னுடைய அப்பா இறந்துவிட்ட தகவலை சொன்னதா நான் போலீசார் விசாரணையின் போது சொல்லியிருக்கிறேன். போலீசார் அரசு மருத்துவமனையில் வைத்து என்னை விசாரித்தபோது ஏதேனும் கையெழுத்து போட்டேனா என்று சொன்னால் பாடியை என்னிடத்தில் கொடுக்கும்போது கையெழுத்து போட்டேன். நான் சொல்வதுபோல் கேசவன் உடலை பார்க்க அரசு மருத்துவமனை போச்சம்பள்ளிக்கு போகவில்லை என்றும் , அங்கு கேசவன் உடலை ஏதும் நான் பார்க்கவில்லை என்றும் அவ்வாறு போனதாகவும் உடலை பார்த்ததாகவும் நான் பொய்யாக சாட்சி அளிக்கிறேன் என்றால் அது தவறு. கேசவன் இறப்பிற்கும் இந்த எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் அது தவறு.

VASUDEVAN DAMODARAN

Additional District Judge
Digitally signed by VASUDEVAN DAMODARAN